ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2194/52 - 2020 සැප්තැම්බර් මස 23 වැනි බදාදා - 2020.09.23

*2194/52 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1980 ஆண்டின் 2 ஆம் இலக்க நகர அபிவிருத்தி செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் கீழ்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணிப் பகுதியானது மொறட்டுவை பல்லைக்கழக மருத்துவபீட நிர்மாணிப்பு மற்றும் அது தொடர்பான நகர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது எனக் கருதுவதனால், குறிப்பிட்ட காணியானது தொடர்புடைய நோக்கத்திற்குத் தேவைப்படுகின்றதென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

**கோட்டாபய ராஜபக்ஷ,**
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு,*
*2020, செத்தெம்பர் 17.*

1A - G 32976 — 25 (2020/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், தொடங்கொட பிரதேச செயலாளர் பிரிவில் இல. 799C, மேற்கு பூஹம்போகொட கிராம அலுவலர் பிரிவினுள் உள்ள பூஹம்போகொட கிராமத்தில் அமைந்துள்ளதும், உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. என். மலித் எம். த சில்வா அவர்களினால் 2018.12.06 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இலக்கம் 3321 இல் காணித்துண்டு எழுத்து A எனக் குறிக்கப்பட்ட காணித்துண்டானது 7.7270 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட தித்தகஸ்முல்லைலந்த வத்த என்றழைக்கப்படும் காணிகளின் எல்லைகள் பின்வருமாறு -

வடக்கு : சீ. ரணவீர மற்றும் ஏனையோர் உரிமை கோரும் காணி ;

கிழக்கு : எலதுவ வீதி, கே. ஜீ. குல்மன்சிஞ்ஞோ மற்றும் ஏனையோர், கே. ஏ. சோமபால மற்றும் ஏனையோர்கள், மாதிரிப்பட இல. 473 இல் காணித்துண்டு இலக்கம் 1 இன் ஒரு பகுதி (எம். கே. என். குரே உரிமை கோரும் காணி) மற்றும் ஆர். ஹேந்திரிக் மற்றும் ஏனையோர்கள் ;

தெற்கு : கே. ஏ. சோமபால மற்றும் ஏனையோர்கள் மாதிரிப்பட இல. 473 இல் காணித்துண்டு இல. 1 இன் பகுதி (எம். கே. என். குரே உரிமை கோரும் காணி), ஆர். ஹேன்திரிக் மற்றும் ஏனையோர்கள் மற்றும் மாதிரிப்பட இல. 473 இல் காணித்துண்டு இல. 2 ;

மேற்கு : சீ. ஏ. டாவின் சிஞ்ஞோ மற்றும் ஏனையோர்கள் கே. ஜே. ரணவீர மற்றும் ஏனையோர்கள் கே. ஏ. ஜூலிஸ் சிஞ்ஞோ மற்றும் ஏனையோர்கள்.

*10-336*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.